# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

## புவியியல்

சுட்டெண் ..........................................................   தரம்: 9   நேரம் - 2.00 மணித்தியாலம்

### பகுதி - I

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

**1 - 5 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சரியான விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.**

1. ஐரோப்பாவும் ஆசியாவும் ஒரே நிலத்திணிவாக அமைந்திருப்பதால் அது எப்பெயரால் அழைக்கப்படும்.
   1. ரஷ்யா   2. யுரேசியா   3. பிளைத்தோசின்   4. யுடோப்பியா

2. ஆசியாவில் காணப்படும் சுதந்திர அரசுகளின் எண்ணிக்கை
   1. 84   2. 64   3. 34   4. 54

3. உலகில் அயனமழைக் காலநிலை பரவியுள்ள பகுதிகளைக் காட்டும் சரியான விடைத்தொகுதி
   1. கிழக்குச்சீனா, யப்பான் தீவுகள்   2. இந்தியா, இலங்கை
   3. யாவா, சுமாத்திரா தீவுகள்   4. வடகிழக்கு இந்தியா, பங்களாதேஷ்

4. செஸ்னட், டக்லஸ்பர் போன்ற மரவகைகள் அதிகமாகக் காணப்படும் இயற்கைத் தாவர வலயம்
   1. இடைவெப்ப இலையுதிர் காடுகள்   2. அரைவறள் வலயம்
   3. அயன மழைக்காடுகள்   4. ஊசியிலைக் காடுகள்

5. பின்வரும் பிரதேசங்களில் விலங்கு வேளாண்மை நடைபெறும் பகுதி
   1. ரூமஸ்வல   2. கிரல்லகல   3. புந்தல   4. பட்டிப்பொல

**(5x2=10 புள்ளிகள்)**

**6 - 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( x ) எனவும் எதிரே வழங்கப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் குறித்துக் காட்டுக.**

6. விவசாயம் சாராத செயற்பாடுகளை மையமாகக் கொண்டு வரையறைக்குட்பட்ட நிலப்பகுதியில் அதிக அடர்த்தியைக் கொண்டுள்ள பகுதிகள் கிராம நகரக் குடியிருப்புக்கள் எனப்படும். (   )

7. இலங்கையில் வீதி அபிவிருத்தி மற்றும் போக்குவரத்துத் துறையானது ஆண்டுக்கு 5% - 6% வேகத்தில் வளர்ச்சி அடைகிறது. (   )

8. கஹட, புளு போன்ற தாவர வகைகளை மலைநாட்டு உலர்வலயக் காடுகளில் காணலாம்.(   )

9. நன்கா பாபட் மலைச்சிகரம் 8156 மீற்றர் உயரமுடையது. (   )

10. 2012ம் ஆண்டின் தரவின்படி இலங்கையில் 9.7 சதவீத இஸ்லாம் மதத்தினர் வாழ்கின்றனர். (   )

**(5x2=10 புள்ளிகள்)**

**11 - 15 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையினை புள்ளிக் கோட்டின்மீது எழுதுக.**

**(சீதாவாக்கை, தரையமைப்பு, கண்டல், பலன, யாழ்ப்பாணக்குடா, பெரலிய, முட்புதர், வெளி எல்லை)**

11. இலங்கையில் காணப்படும் கைத்தொழில் நகரங்களில் .................................................... ஒன்றாகும்.

12. குறியீட்டு விளக்கங்கள் படத்தாளின் ........................................................ கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது.

13. ........................................................................ நாட்டில் சுண்ணாம்புக்கல் பெருமளவில் காணப்படுவதை அவதானிக்க முடியும்.

14. ஆனைவிழுந்தான், திருகோணமலை, புந்தல போன்ற பகுதிகளில் ........................................... காணப்படுகின்றன.

15. இடைவிளக்கப்படமொன்றில் சமவுயரக் கோடுகளுக்கிடையில் காணப்படும் அகன்ற இடைவெளியின் மூலம் சமவெளியின் .......................................................... இனங்காண முடியும்.

**(5x2=10 புள்ளிகள்)**

**16 - 20 வரையான வினாக்களுக்கு "அ" பிரிவுக்கான விடையை "ஆ" பிரிவிலிருந்து தெரிந்து இணைக்குக.**

| அ | ஆ |
|---|---|
| 16. நக்கில்ஸ் | புஜிட்சு |
| 17. மீகொங் நதி | கோவிந்த ஹெல |
| 18. யப்பான் | பெரலிய |
| 19. எச்சக்குன்று | பலன |
| 20. கணவாய் | 4909 Km |

**(5x2=10 புள்ளிகள்)**

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) தரப்பட்ட உலகப்படத்தில் குறித்துக் காட்டப்பட்ட ஆங்கில எழுத்துக்களுக்குரிய இடங்களை இனங்கண்டு எழுதுக.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பசுபிக் சமுத்திரம் | (........................) | 2. | பிரித்தானியா | (........................) |
| 3. | தென்அமெரிக்க கண்டம் | (........................) | 4. | வங்காள விரிகுடா | (........................) |
| 5. | மத்தியதரைக்கடல் | (........................) | 6 | மடகஸ்கார் | (........................) |

(6x2 = 12 புள்ளி)

02) 1. ஆசியாக் கண்டத்தின் தனி அமைவிடத்தினைத் தருக.
2. ஆசியாக் கண்டத்தில் காணப்படும் பெரிய தீவுகள் நான்கினைக் குறிப்பிடுக.
4. ஆசியாப் பிரதேசத்தின் மானிட அடிப்படையிலான சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

03) 1. காலநிலை என்றால் என்ன?
2. இலங்கையின் வெப்பநிலைப் பரம்பலில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.
3. தாழ்நில உலர் வலயத்தின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

04) 1. எச்சக் குன்றுகள் என்றால் என்ன?
2. இடைநிலைச் சமவெளியின் முனைப்பான அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. கரையோரச் சமவெளியில் காணப்படுகின்ற தரைத்தோற்ற அம்சங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

05) 1. இயற்கைத் தாவரங்கள் என்றால் என்ன?
2. இயற்கைத் தாவரங்களின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான பௌதிகக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. மலைநாட்டு ஈர வலயக் காடுகளின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

06) 1. சனத்தொகையின் இயற்கையான வளர்ச்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.
2. கொழும்பை அண்டிய பிரதேசங்களில் சனத்தொகை அதிகரிப்பிற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. இலங்கையில் முதியோர் சனத்தொகை அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக.

(3+4+5 = 12 புள்ளிகள்)

07) 1. தேசப்படமொன்றின் அடிப்படை அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
2. 1:50000 இடவிளக்கப்படங்களில் காணப்படும் பௌதிக அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
3. இடவிளக்கப்படத்தில் குறித்துக் காட்டப்படும் பின்வருவனவற்றுக்குரிய குறியீடுகளை உரிய நிறத்தினைப் பயன்படுத்தி வரைக.

a. பாடசாலை
b. வெளிச்சவீடு
c. சம ஆழக் கோடுகள்
d. பொலிஸ் நிலையம்
e திரிகோண கணித நிலையம்

(3+4+5 = 12 புள்ளிகள்)